## வழிகாட்டிக் கட்டுரை
## [பரிந்துரைக்கப்படும் நேரம் 30 நிமிடம்]

கீழே கொடுக்கப்பட்டுள்ள தூண்டல் பகுதியைத் துணையாகக் கொண்டு வழங்கப்பப்பட்டுள்ள தலைப்புகளில் **ஒன்றனைத்** தேர்ந்தெடுத்து ஒரு கட்டுரை எழுதுக.

**மலாக்கா மாநிலத்திற்குக் கல்விச் சுற்றுலா**

**1.சுற்றுலா விபரங்கள் :**
நாள் : 11/12/2022
இடம் : மலாக்கா மாநிலம்
மாணவர்கள் : 50
ஆசிரியர்கள் : 10

**2.நோக்கம் :**
1. ஒற்றுமமையை வளர்த்தல்.
2. வரலாற்றுச் சிறப்புகளை அறிதல்

**3.முன்னேற்பாடுகள் :**
3 மாதங்களுக்கு முன்பு அனுமதி பெறுதல் & கட்டணம் வசூலித்தல்

**4.சுற்றிப்பார்த்த இடங்கள் :**
- ஆபாமோசா கோட்டை,
- தாமிங் சாரி கோபுரம்,
- மலாக்கா ஆறு படகுச்

**5.பெற்ற அனுபவம் :**
- இனிமையாகப் பொழுதைக் கழித்தல்
- வரலாற்றுச் செய்திகளை அறிதல்

- உன் பள்ளியின் வரலாற்றுக் கழகம் கல்விச் சுற்றுலா ஒன்றனை ஏற்பாடு செய்திருந்தது. அது குறித்து வெளியூரில் வசிக்கும் உன் நண்பனுக்குக் **கடிதம்** ஒன்றனை எழுதுக.

**அல்லது**

- உன் பள்ளியின் வரலாற்றுக் கழகம் ஏற்பாடு செய்த கல்விச் சுற்றுலா **அறிக்கை** ஒன்றனை எழுதுக.

**அல்லது**

- உன் பள்ளியின் தமிழ்மொழிக் கழகம் ஏற்பாடு செய்த கல்விச் சுற்றுலாவின் அனுபவங்கள் குறித்து நீயும் உன் நண்பரும் உரையாடுகிறீர்கள். **அவ்வுரையாடலை** எழுதுக.

(30 புள்ளி)

**உரையாடல் அமைப்பு**

உரையாடல் என்பது இருவருக்கும் மேற்பட்டோர் ஒரு விடயம் குறித்துக் கலந்துரையாடுவது.

**உரையாடல் திட்டமிடல்**

- உரையாடலுக்கான **களம், காலம், பங்கேற்பாளர், நோக்கம்** ஆகியவற்றைத் திட்டமிடல் அவசியம்.
  - களம் (எங்கு)
  - காலம் (எப்போது)
  - பங்கேற்பாளர் (யார்?)
  - நோக்கம் (ஏன்)
  - குறிப்புகளை வினாவாகவும் விடையாகவும் அமைத்தல்.

**உரையாடல் அமைப்பு**

- உரையாடல் அமைப்பு (இருவர் பேசிக் கொள்வதுபோல்)
- கருத்து, வினா, விடை அமைப்பில் உரையாடல் எழுதப்படவேண்டும்
- **தொடக்கம்**
  - **சூழல்** : (களம், காலம், பங்கேற்பாளர், நோக்கம்)
    **எ.காட்டு** :
    (சிற்றுண்டி வேளையின்போது அமுதன் தன் நண்பன் இளமாறனிடம் தான் சென்று வந்த சுற்றுலா குறித்து உரையாடிக் கொண்டிருக்கின்றான்)

- **கருத்து ( 5 கருத்துகள்)**
  - வணக்கத்தோடு தொடங்க வேண்டும்.
  - அனைத்துக் கருத்துகளையும் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

- **முடிவு**
  - விடைபெறுதல்
  - நன்றி

**மாதிரி கட்டுரை (உரையாடல்)**

**யார்? எதைப் பற்றி? எங்கு?**

**சூழல்** : (சிற்றுண்டி வேளையின்போது கண்மணி தன் தோழி யாழினி தான் சென்று வந்த சுற்றுலா குறித்து உரையாடிக் கொண்டிருக்கின்றான்)

யாழினி : வணக்கம் திருமதி கண்மணி.

கண்மணி : வணக்கம் யாழினி

**தொடக்கத்தில் வணக்கம் இருக்க வேண்டும்**

யாழினி : என்ன களைப்பாகக் காணப்படுகிறாய் கண்மணி ?

கண்மணி : ஆம் யாழினி. மலாக்காவிற்குச் சுற்றுலா சென்றிருந்தேன். நேற்று நள்ளிரவுதான் இங்கு வந்து சேர்ந்தோம். அதனால்தான் கொஞ்சம் களைப்பாக இருக்கிறது.

யாழினி : ஓ அப்படியா? குடும்பச் சுற்றுலா சென்றிருந்தீர்களா?

கண்மணி : இல்லை, பள்ளியின் வரலாற்றுக் கழகம் ஏற்பாடு செய்த கல்விச் சுற்றுலா. 11/12/ 2022 – 13/11/2022 வரை மலாக்கா மாநிலத்திற்குச் சென்றிருந்தோம். 50 மாணவர்களும் 10 ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

யாழினி : வரலாற்றுக் கழகம் இந்தச் சுற்றுலாவை ஏற்பாடு செய்ததற்கான காரணம் என்ன கண்மணி ?

கண்மணி : மலாக்கா மாநிலத்தின் வரலாற்றுச் சிறப்பை அறிந்து கல்வி கேள்விகளில் பயன்படுத்துவதோடு கழக உறுப்பினர்களிடையே ஒற்றுமையை மேம்படுத்துவதற்க்காகவே இச்சுற்றுலா மேற்கொள்ளப்பட்டது

யாழினி : நல்லது கண்மணி. இந்தச் சுற்றுலா நடைபெறுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பாகவே இதற்கான முன்னேற்பாடுகளைத் தொடங்கி இருக்க வேண்டும். அப்படிதானே?

கண்மணி : ஆம், முதலில் மூன்று மாதங்களுக்கு முன்பே இச்சுற்றுலா செல்வதற்கான அனுமதியைக் கல்வி அமைச்சிடமிருந்து பெற்று விட்டோம். பிறகு மாணவர்களிடம் 100.00 ரிங்கிட் கட்டணம் வசூலிக்கச் தொடங்கினோம். சுற்றுலா செல்வதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாகவே அனைத்து வேலைகளையும் முழுமையாகச் செய்து முடித்து விட்டோம்.

யாழினி : கண்டிபாக இச்சுற்றுலா மகிழ்ச்சிகரமானதாக இருந்திருக்கும். ஆமாம்தானே கண்மணி. ம்ம்ம்ம்.... மலாக்கா புகழ்பெற்ற சுற்றுலாத் தளமாதலால் நிறைய

இடங்களைச் சுற்றிப் பார்த்திருப்பீர்கள். அதைப் பற்றி கொஞ்சம் சொல்லேன். கேட்க ஆவலாக இருக்கிறது.

கண்மணி : கண்டிப்பாக கண்மணி. முதலில் நாங்கள் 'ஆபா மோசா' கோட்டைக்குத்தான் சென்றோம். அந்தக் கோட்டையைச் சுற்றிப் பார்த்ததோடு அதன் வரலாற்றுக் குறிப்புகளையும் குறித்துக்ம் கொண்டோம். அடுத்து, அங்கிருந்து மலாக்கா ஆறு படகுச் சவாரி சென்றோம். படகுப் பயணம் புதிய அனுபவமாக இருந்தது.

யாழினி : சிறப்பு கண்மணி. சிறு வயதாக இருக்கும்போது நான் 'தாமிங் சாரி' கோபுரத்திற்குச் சென்றதாக நினைவிருக்கிறது. நீ அங்கு செல்லவில்லையா?

கண்மணி : சென்றோம் கண்மணி. அதுதான் நாங்கள் சென்ற கடைசி இடம். மிக உயரத்திலிருந்து மலாக்கா மாநிலத்தைக் கண்டதும் புதிய அனுபவமாக இருந்தது.

யாழினி : உறுதியாகச் சொல்கிறேன் இந்தச் சுற்றுலா மிக இன்பமானதாகத்தான் அமைந்திருக்கும்.

கண்மணி : ஆம் கண்மணி, பாடத்திற்கும் அறிவுக்கும் தேவையான வரலாற்றுத் தகவல்களோடு பொழுதை இனிமையாகக் கழித்தது இன்பத்திற்கு மேல் இன்பம் சேர்த்ததுபோல் இருந்தது.

(ட்ரிங்ங்ங்... ட்ரிங்ங்ங்... பள்ளி சிற்றுண்டி வேளை முடிவடைகிறது)

யாழினி : சரி கண்மணி, பள்ளி இடைவேளை முடிந்தது. இது குறித்து நாம் பள்ளி முடிந்து பேசுவோம்.

கண்மணி : சரி யாழினி, மீண்டும் சந்திப்போம்.

**முடிவில் விடைபெறுதல் இருக்க வேண்டும்**

**நட்புக் கடிதம் :**

**அனுப்புநர் முகவரி**

இ. கண்மணி
எண் 13, தாமான் செந்தோசா,
41200, கிள்ளான், சிலாங்கூர்

24/11/2022 **திகதி**

**அன்புள்ள யாழினிக்கு..** **விளிப்பு**

**வணக்கம்.** நானும் என் குடும்பத்தாரும் இங்கு நலமாக உள்ளோம். இறையருளால் நீயும் நலமாக இருப்பாய் என எண்ணுகிறேன். கடந்த கடிதத்தில் நான் சென்ற மலாக்கா மாநில கல்விச் சுற்றுலா குறித்து எழுதச் சொல்லியிருந்தாய். அதற்காகத்தான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

இச்சுற்றுலா, பள்ளியின் வரலாற்றுக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது. 11/12/2022 தொடங்கி 13/11/2022 வரை மலாக்காவிற்கு 50 மாணவர்களும் 10 ஆசிரியர்களும் சென்றிருந்தோம். மாணவர்களிடையே ஒற்றுமை உணர்வை மேம்படுத்தவும் மலாக்கா மாநில வரலாற்றுச் சிறப்புகளை அறிந்து கொள்ளவுமே இச்சுற்றுலா நடத்தப்பட்டது.

தோழி,

இச்சுற்றுலா மேற்கொள்வதற்காக கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பாகவே பல முன்னேற்பாடுகள் திட்டமிடப்பட்டன. அதில் முக்கியப் பணியாக கல்வி அமைச்சிடமிருந்து சுற்றுலா செல்வதற்கான அனுமதி பெறப்பட்டது. பின்பு, சுற்றுலாவிற்கு வர பதிவு செய்திருந்த மாணவர்களிடமிருந்து தலா 100 ரிங்கிட் வசூலிக்கப்பட்டது. மேலும் சுற்றுலாவிற்கான பல ஆயத்தப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

மூன்று நாட்கள் இரண்டு இரவுகள் மலாக்காவில் பல்வேறு இடங்களைக் கண்டு களித்தோம். மலாக்கா மாநிலத்தின் வரலாற்றுக் கட்டடமான ‘ஆ பா மோசா’ கோட்டை, ‘தாமிங் சாரி’ கோபுரம். மலாக்கா ஆறு படகுச் சவாரி எனப் பல இடங்களைக் கண்டு மகிழ்ச்சியுற்றோம்.

தோழி,

இச்சுற்றுலா மிக இனிய அனுபவமாக அமைந்திருந்ததோடு, மலாக்கா மாநிலத்தின் வரலாற்றுத் தகவல்கள் அறிவுக்கு விருந்தாகவும் அமைந்தது. இத்தகைய சிறப்பு மிக்க சுற்றுலாத் தளங்களை நீயும் சென்று காண வேண்டும் என எதிர்பார்க்கிறேன்.

சரி நண்பா, ஓய்வாக இருந்தால் நீ சென்று கண்ட சுற்றுலாத் தளம் குறித்த தகவல்களை எனக்குப் பகிர்வாய் என நம்புகிறேன். இத்துடன் என் கடிதத்தை முடித்துக் கொள்கிறேன். உன் மறு கடிதத்திற்காகக் காத்திருப்பேன். நன்றி வணக்கம்

**இப்படிக்கு,**

அன்பு தோழி,

**கையொப்பம்** *கண்மணி*

## வழிகாட்டிக் கட்டுரை
## [பரிந்துரைக்கப்படும் நேரம் 30 நிமிடம்]

கீழே கொடுக்கப்பட்டுள்ள தூண்டல் பகுதியைத் துணையாகக் கொண்டு வழங்கப்பப்பட்டுள்ள தலைப்புகளில் **ஒன்றனைத்** தேர்ந்தெடுத்து ஒரு கட்டுரை எழுதுக.

**மலாக்கா மாநிலத்திற்குக் கல்விச் சுற்றுலா**

**1.சுற்றுலா விபரங்கள் :**
நாள் : 11/12/2022
இடம் : மலாக்கா மாநிலம்
மாணவர்கள் : 50
ஆசிரியர்கள் : 10

**2.நோக்கம் :**
1. ஒற்றுமமையை வளர்த்தல்.
2. வரலாற்றுச் சிறப்புகளை அறிதல்

**3.முன்னேற்பாடுகள் :**
3 மாதங்களுக்கு முன்பு அனுமதி பெறுதல் & கட்டணம் வசூலித்தல்

**4.சுற்றுலாத் தளங்கள் :**
- ஆபாமோசா கோட்டை,
- தாமிங் சாரி கோபுரம்,
- மலாக்கா ஆறு படகுச்

**5.பயன்கள் :**
- மன அழுத்தம் குறைத்து இனிமையாகப் பொழுதைக் கழித்தல்
- வரலாற்றுச் செய்திகளை

- உன் பள்ளியின் வரலாற்றுக் கழகம் கல்விச் சுற்றுலா ஒன்றனை ஏற்பாடு செய்ய திட்டமிட்டிருக்கிறது. அச்சுற்றுலாவுக்கான அனுமதி கோரி மாவட்ட கல்வி அலுவலகத்திற்கு அலுவல் **கடிதம்** ஒன்றனை எழுதுக.

**அல்லது**

- உன் பள்ளியின் வரலாற்றுக் கழகம் ஏற்பாடு செய்த கல்விச் சுற்றுலா **அறிக்கை** ஒன்றனை எழுதுக.

**அல்லது**

- உன் பள்ளியின் தமிழ்மொழிக் கழகம் ஏற்பாடு செய்த கல்விச் சுற்றுலாவின் அனுபவங்கள் குறித்து நீயும் உன் நண்பரும் உரையாடுகிறீர்கள். **அவ்வுரையாடலை** எழுதுக.

(30 புள்ளி)

**அலுவல் கடிதம் :**

வரலாற்றுக் கழகம்
இராஜா மகாடி இடைநிலைப்பள்ளி
தாமான் கிள்ளான் ஜயா,
41200, கிள்ளான்
சிலாங்கூர்.

**அனுப்புநர் முகவரி**

---

கல்வி அதிகாரி
கிள்ளான் மாவட்ட கல்வி அலுவலகம்,
மேரு சாலை,
39000 கிள்ளான்,
சிலாங்கூர்.

**பெறுநர் முகவரி**

திகதி : 5/01/2022

**கல்விச் சுற்றுலாவுக்கான அனுமதி கோரல்**

**கரு / தலைப்பு**

வணக்கம். மேற்கண்ட கருவிற்கு ஏற்ப இராஜா மகாடி இடைநிலைப்பள்ளி வரலாற்றுக் கழகத்தின் செயலர் என்னும் முறையில் எங்கள் கழகத்தின் மலாக்கா மாநில கல்விச் சுற்றுலாவிற்கு அனுமதி கோரியே இக்கடிதத்தை எழுதுகிறேன்.

**தொடக்கம் அறிமுகமும் நோக்கமும்**

2. எங்கள் கழகத்தின் ஆண்டு திட்டத்தின்படி இந்தக் கல்விச் சுற்றுலா திட்டமிடப்பட்டுள்ளது. கழக மாணவர்களிடையே வரலாற்றுச் சிறப்பின் அவசியத்தை வலியுறுத்துவதற்காகவும் பல்லின மாணவர்களிடையே ஒற்றுமையை மேம்படுத்துவமே இந்தச் சுற்றுலாவின் அடைப்படை நோக்கமாகும்.

3. எதிர்வருகின்ற 11ஆம் திகதி டிசம்பர் மாதம் 2022இல் மலாக்கா மாநிலத்திற்குச் சுற்றுலா மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. 50 கழக உறுப்பினர்களும் 10 ஆசிரியர்களும் இச்சுற்றுலாவில் பங்குபெறுவர்.

4. இந்தச் சுற்றுலாவின் முன்னேற்பாடுகளாக மாணவர்களின் பெற்றோர்களிடமிருந்து முறையான அனுமதி பெறப்பட்டுள்ளது. சுற்றுலாவின் கட்டணமாக ரிம 100 வசூலிக்கப்படுகிறது.

5. மலாக்கா கல்விச் சுற்றுலாவில் ஆபாமோசா கோட்டை, தாமிங் சாரி கோபுரம் போன்ற இடங்களைச் சுற்றிப் பார்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் மலாக்கா ஆறு படகுச் சவாரியும் சுற்றுலா நடவடிக்கைகளில் ஓர் அங்கமாக இடம்பெறுகிறது.

6. இக்கல்விச் சுற்றுலாவின்வழி மாணவர்கள் மலாக்கா மாநிலத்தின் வரலாற்றுச் செய்திகளை அறிந்து வரலாற்று அறிவைப் பெருக்கிக் கொள்ள இயலும். அதோடு, இச்சுற்றுலா மாணவர்களின் மன அழுத்தத்தைக் குறைத்து இனிமையாக பொழுதைக் கழிக்க உதவும்.

7. இறுதியாக, மாணவர்களின் உடல், உளம், அறிவாற்றல், நன்னெறி, சமூகத் தொடர்பு போன்ற கூறுகளை மேம்படுத்த வழிவகுக்கும் இச்சுற்றுலாவிற்குத் தாங்கள் அனுமதி தருவீர்கள் எனப் பெரிதும் எதிர்பார்க்கின்றேன். மிக்க நன்றி.

**முடிவு : எதிர்பார்ப்பும் நன்றியும்**

**இப்படிக்கு,**

*கண்மணி* ← **கையொப்பம்**
(கண்மணி இளம்பூரணன்) ← **முழுப் பெயர்**
செயலர், ← **பதவி**
இராஜா மகாடி இடைநிலைப்பள்ளி ← **இயக்கம்**
வரலாற்றுக் கழகம் 2022

**செயலறிக்கை**

தலைப்பு : யார்? என்ன? ஆண்டு?

## இராஜா மகாடி இடைநிலைப்பள்ளி வரலாற்றுக் கழகத்தின் மலாக்கா மாநில கல்விச் சுற்றுலா 2022

**1. தொடக்கம்**

யார்? என்ன? எப்போது, எங்கு? பங்குபெற்றோர்?

இராஜா மகாடி இடைநிலைப்பள்ளி வரலாற்றுக் கழகத்தின் ஆண்டு செயல் திட்டத்தில் முக்கிய நடவடிக்கைகளில் ஒன்று வரலாற்று இட கல்விச் சுற்றுலா. இதன் அடிப்படையில் கடந்த 11/12/2022இல் வரலாற்றுக் கழகம் மலாக்கா மாநிலத்திற்குக் கல்வி சுற்றுலா ஒன்றனை மேற்கொண்டது. இச்சுற்றுலாவில் 50 மாணவர்களும் 10 ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

**2. நோக்கம்**

பல்லின மாணவர்களிடையே ஒற்றுமையை மேம்படுத்துவதற்காகவும் வரலாற்று இடங்களின் சிறப்பின் அவசியத்தை வலியுறுத்துவதற்காகவும் இச்சுற்றுலா திட்டமிடப்பட்டுள்ளது.

**3. முன்னேற்பாடுகள்**

இச்சுற்றுலாவின் கட்டணமாக மாணவர்களிடையே ரிம 100 வசூலிக்கப்பட்டது. மேலும் இரண்டு மாதங்களுக்கு முன்பாகவே மாணவர்களின் பெற்றோர்களிடமிருந்து அனுமதி பெறப்பட்டது.

**4. சுற்றிப் பார்த்த இடங்கள்**

மலாக்கா மாநிலத்தின் சிறப்பிற்குரிய இடங்களான ஆபாமோசா கோட்டை, தாமிங் சாரி கோபுரம் போன்ற இடங்கள் சுற்றிப் பார்க்கப்பட்டன. மேலும், இச்சுற்றுலாவின் சிறப்பு அங்கமாக மலாக்கா ஆறு படகுச் சவாரி செய்யப்பட்டது.

**5. பெற்ற பயன்கள்**

இச்சுற்றுலா பயன் மிக்க சுற்றுலாவாக அமைந்திருந்தது. மாணவர்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களை நேரடியாகக் கண்டு பயனடைந்தனர். அதோடு, இச்சுற்றுலா மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மன உலைச்சலைத் தவிர்த்து இனிமையாக பொழுதைக் கழிக்க உதவியது.

**6. முடிவு**

இந்த மலாக்கா மாநில கல்விச் சுற்றுலா எந்தத் தடையுமின்றி மிகச் சிறப்பாக நடந்தெறியது. இந்தச் சுற்றுலாவில் கலந்து கொண்ட மாணவர்களும் ஆசிரியர்களும் பாதுகாப்புடன் வீடு திரும்பினர்.

**அறிக்கை தயாரித்தவர்,** **திகதி : 24/12/2022**

*கண்மணி* ← **கையொப்பம்**
**(கண்மணி இளம்பூரணன்)** ← **முழுப் பெயர்**
செயலர், ← **பதவி**
இராஜா மகாடி இடைநிலைப்பள்ளி ← **இயக்கம்**
வரலாற்றுக் கழகம் 2022

**திறந்த முடிவு கட்டுரை (எதிர்பார்ப்பு)**

**1. கருத்து விளக்கக் கட்டுரை**
- சேமிப்பு
- தாய்
- பெற்றோர்
- குடும்பம்
- வாசிப்பு
- மொழி

**2. வாதக் கட்டுரை**
- தனியார் உயர்க்கல்வியைவிட அரசாங்க உயர்க்கல்வியே சிறந்தது
- இலக்கியமே மனிதனின் வாழ்க்கையை செம்மைப்படுத்தும்
- இளைஞர்களின் சீர்கேட்டிற்குத் தமிழ்த்திரைப்படங்களே காரணம்

**குடும்பம்**

**முன்னுரை :**

மாற்றம் ஒன்றே மாறாதது; மாறாததெல்லாம் மண்னோடு. ஒவ்வொரு கணமும் மாறுதல்களை எதிர்நோக்கி இருக்கும் இந்த உலகம் புதுமையையும் தொடர்ந்த நவீனத்தையும் கண்டு கொண்டிருக்கிறது. இந்த மாறுதல்களெல்லாம் ஓர் அச்சாணியிலிருந்துதான் தொடங்குகிறது. அந்த அச்சாணிதான் **குடும்பம்**.

**கருத்து 1 : குடும்பம் என்றால் என்ன?**

குடும்பம் என்பது ஒரு வீட்டில் வாழும் உறவுகளின் கூட்டு வாழ்க்கை. தாய், தந்தை, பிள்ளைகள், மேலும் பிற உறவுகளெல்லாம் கூடி வாழும் ஓர் அமைப்பே குடும்பம். உணர்வுகளையும் உடமைகளையும் பரிமாறிக் கொண்டு ஒருவரை ஒருவர் மதித்துப் புரிந்து கொண்டு வாழும் வாழ்க்கையே குடும்ப வாழ்க்கைக்கான அடித்தளமாகும். இப்படி வாழும் குடும்பத்திலிருந்துதான் நல்ல வளமிக்க மனித மூலதனங்கள் உருவாகுகின்றன. நல்ல மனிதர்களின் உருவாக்கம் சிறந்த சமூகத்தின் வித்தாக அமைகிறது. சிறந்த சமூகத்தின் வளர்ச்சி ஒரு நாட்டின் மேன்மைக்கு அடைப்படையாக இருக்கின்றது. ஆகவே, உலக அமைதிக்கும் மேன்மைக்கும் நல்ல குடும்பங்கள் வளப்பம் அடிப்படை என்றால் அது மிகையாகாது.

**கருத்து 2 : குடும்பத்தின் வகை**

குடும்பங்கள் தனிக் குடும்பம், கூட்டுக் குடும்பம் என இரு வகைப்படும். தனிக் குடும்பம் என்றால் சிறிய அளவு குடும்ப உறுப்பினர்களைக் கொண்ட குடும்பம். பெற்றோர், பிள்ளைகள் என்று சிறிய வட்டத்திற்குள் வாழும் அமைப்பே தனிக் குடும்பம். கூட்டுக் குடும்பம் என்றால் அதிகமான குடும்ப உறுப்பினர்களைக் கொண்டு உறவுகள் கிளைத்து நிற்கும். தாத்தா-பாட்டி, தாய்-தந்தை, மாமன்-அத்தை, பேரப் பிள்ளைகள் என அதிகமான உறவுகள் கூடி வாழும் நிலையைக் கூட்டுக் குடும்பங்களில் காணலாம்.

**கருத்து 3 : கூட்டுக் குடும்பத்தின் நன்மைகள்**

நல்ல அறங்களைப் போற்றி வாழும் குடும்பத்திலிருந்துதான் நல்ல மனிதர்கள் தோன்றுவார்கள். ஒரு தனி மனிதனின் வளர்ச்சிக்கும் இதுவே அடிப்படையாகிறது. கூட்டுக் குடும்பத்தில் பல நல்ல உறவுகளுக்கு மத்தியில் வாழும் ஒருவன் பண்பாளனாக முடியும். மூத்த உறவுகளின் வழிகாட்டல், தவறிழைக்கும் போது உறவுகளின் கூட்டான அறிவுரைகள், வழுக்கல் நேரிடும்போது தாங்கிப் பிடிக்கும் அன்பான உறவுகள் போன்ற கூட்டுக் குடும்பத்தின் செயல்பாடுகள் ஒழுக்கமுள்ள தனிமனிதனின் உருவாக்கத்திற்கு அடிப்படையாக இருக்கின்றன. எடுத்துக் காட்டிற்கு குடும்பத்தில் இளையவன் ஒருவன் தவறிழைக்கும்போது அவனைச் சுற்றி இருக்கின்ற தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா, அத்தை, மாமன் போன்ற உறவுகள் அவனைக் கண்டிப்பதோடு ஆறுதலாகவும் இருப்பார்கள். இதுவே ஒருவனுக்கு வேலியாக அமைந்து வாழ்க்கையை நெறிப்படுத்துகிறது.

**கருத்து 4: கூட்டுக் குடும்பத்தின் நன்மை 2**

மேலும், கூட்டுக் குடும்பத்தில் வாழ்வதால் சிக்கல்களையும் நெருக்கடிகளையும் மிக எளிதாக கடந்து விடலாம். சிக்கல் நேரிடும்போது குடும்ப உறவுகள் கூட்டாகச் சேர்ந்து ஒற்றுமையுடன் கலந்துரையாடி செயல்பட்டால் அச்சிக்கலைக் களைய இயலும். சான்றாக, கூட்டாக வாழும் குடும்பத்தில் வாழும் ஒருவர்க்கு ஏற்படுகின்ற பண நெருக்கடியை அக்குடும்பத்தில் உள்ள அனைவரும் தங்களுக்கு இயன்றதைக் கொடுத்து உதவி களைந்திட இயலும். இவ்வாறாக எந்தச் சிக்கல் வரினும் அவற்றைக் கூட்டுக் குடும்பமாக இருந்து எதிர்கொள்ளும்போது அவற்றை எளிமையாகக் கடந்து விடலாம்.

**கருத்து 5 : குடும்பம் எனும் அமைப்பு சீர்குலைந்தால் ஏற்படும் விளைவுகள்**

ஒற்றுமையில்லாக் குடும்பம் ஒருமிக்கக் கெடும் என்பார்கள். குடும்பம் எனும் அமைப்புப் பிரிவினைகளால் சீர்குலைந்து போனால் அது சமூகத்திற்கும் நாட்டிற்கும் மிகப் பெரிய இடர்களை ஏற்படுத்தும் என்பது திண்ணம். சான்றாக பெற்றோர்களுக்குடையே ஏற்படும் கருத்து வேறுபாட்டினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை அன்பு கிடைக்காமல் அலையும் நிலை ஏற்படும். இந்நிலையில் அவர்கள் கூடா நட்பில் இணைந்து தவறான நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடும். போதை, புகைத்தல், வன்முறை, திருட்டு எனப் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டு எதிர்காலமே பாதிக்கப்படுகிறது. குடும்பங்களின் வீழ்ச்சி தரமான நாளைய தலைவர்களின் உருவாக்கத்திற்கு தடைக் கல்லாக அமையும்.

**முடிவுரை : பரிந்துரை / சிறப்பு**

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்பார்கள். நல்ல குடும்பங்களே இந்த மண்ணில் நல்வினைகள் நடைபெற காரணமாக இருக்கின்றன. உலகத்தில் நிகழ்கின்ற தீவினைகளெல்லாம் ஒடுங்கிப் போக வளப்பமான குடும்பங்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஆகவே, உலக நலனைப் போற்ற குடும்பங்களின் நலனை போற்றுவது அவசியம். குடும்பம் எனும் கூட்டில் அன்பையும் அறத்தையும் ஆகாரமாக ஊட்டி உலகம் செழிக்க உதவ வேண்டும்.

**தாய் / பெற்றோர்:**

**முன்னுரை :**

- இந்த உலகில் ஒன்றின் பிறப்பு அல்லது உருவாக்கம் அதன் மூலமாக இருக்கின்ற இன்னொன்றிலிருந்துதான் உருவாகிறது. மரத்தளவாடப் பொருள் அதன் மூலம் மரம், கனி அதன் மூலம் கனி கொடுக்கும் செடி, நதி அதன் மூலம் அருவி இப்படி மூலமாக அமைவதே முதன்மையானது அதுவே தாய்மையானது. நாம் இன்று இந்த மண்ணில் உருவாகி இயங்க தாய்மையானது நம்மை ஈன்ற தாய் / பெற்றோர்கள்

**கருத்து 1 ; தாய் /பெற்றோர் கடமை (அடிப்படை தேவைகளைப் பூர்த்திச் செய்தல்)**

- அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திச் செய்வது (உணவு, உடை, உறைவிடம்)
- தங்கள் வியர்வையை இரத்தமாகச் சிந்தி – கடுமையாக உழைத்து பொருள் ஈட்டி பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்திச் செய்கிறார்கள்
- பிள்ளைகள் நலமாக வாழ நல்ல உணவு சமைத்துக் கொடுத்து பசி போக்குகிறார்கள்
- மழையிலும் வெயிலிலும் பாதிக்கப்படாமல் இருக்க வீட்டு வசதிகளைத் தயார் செய்தல்
- மானம் காக்க அணியும் உடை அடிப்படைத் தேவை. அதையும் நிறைவு செய்கிறார்கள்
- இவை அனைத்தையும் செய்து கொடுத்து இந்த மண்ணில் முழு மனிதனாக வாழ உதவுகிறார்கள்

**கருத்து 2 : தாய் / பெற்றோர் கடமை (நற்பண்பையும் ஒழுக்கத்தையும் கற்றுக் கொடுத்தல்)**

- ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
  உயிரினும் ஓம்பப் படும் – ஒழுக்கத்தின் அவசியத்தை உணர்த்துகிறது.
- ஒரு மனிதனுக்கு முதலில் ஒழுக்கம் கற்பிக்கப்படும் இடம் தாயின் கருவறை. அடுத்தது பெற்றோர்களின் அன்பு எனும் அறை.
- கருவில் இருக்கும்போதே ஒரு தாய் – நல்லனவற்றை வாசித்தல், நல்ல அறிவுரைகளைக் கேட்டல், நல்ல செயல்களைப் போற்றல் – தாயின் இவ்வகை செயல்கள் ஒரு குழந்தை பிறக்கும்போதே நல்ல குணங்களைத் தாங்கி பிறக்கும்.
- வளரும் போது வீட்டில் பெற்றோர்கள் நல்ல வழிகாட்டிகளாக அமைந்து ஒழுக்கத்தை கற்றுக் கொடுக்க வேண்டும்.
- அதுவே நற்பண்புள்ள சமூகத்தை உருவாக்கும்.

**கருத்து 3 : இந்தக் கால பெற்றோர்களின் நிலை**

- இன்று காலத்தின் தேவைகள் அதிகமாகிவிட்டன. இந்தத் தேவைகள் அனைத்தும் பணம் எனும் கருவியால் அளவிடப்படுவதால் பெற்றோர்கள் / தாய் எந்நேரமும் பணத்தைத் தேடி பம்பரமாய் சுழல வேண்டி உள்ளது.
- பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்திச் செய்ய வேண்டும் என்ற மாயையில் பணத்தைத் தேடி பேயாக ஓடுகிறார்கள்.
- இந்த நிலையில் வீட்டில் பிள்ளைகளின் நலன் சற்றே கைவிடப்படுகிறது.
- அப்போது பிள்ளைகள் அன்பைத் தேடி வெளியில் சென்று சமுதாயச் சிக்கலில் மாட்டிச் சீரழிகின்றனர். இதுவே இன்றைய பெரும் பகுதி குடும்பங்களின் நிலை.

**கருத்து 4 : தாய் / பெற்றோர்களின் பிள்ளை வளர்ப்பு முறை**

- ஒரு செடியைப் பயிர் செய்து அதைச் செழிப்பாக வளர்க்க, உரமிடுதல், நீர் பாய்ச்சுதல், களை பிடுங்குதல் போன்ற பாதுகாப்புச் செயல்பாடுகள் தேவைப்படுகின்றன.
- அதேபோல்தான் பிள்ளை வளர்ப்பு. பிள்ளைகளை வளர்த்து நல்ல வளமிக்க மனிதனாக்குதல் என்பது அரிய செயல்.
- அவர்களின் உடல் வளர்ச்சிக்கும் உள்ள எழுச்சிக்கும் தேவையானவற்றைத் தேவையான நேரத்தில் வழங்கினால்தான் வளர்ச்சி சீராக இருக்கும்.
- அவ்வகையில் பிள்ளைகளின் அகப் புறத்தேவைகளையும் உள்ளத் தேடல்கலையும் அறிந்து அதற்கேற்ப செயல்பட வேண்டும்.
- கண்டிப்பு, அளவிலா அன்பு, கட்டுப்படுத்தப்பட்ட விடுதலை, தொடர்ந்த அறிவுறை, காலத்திற்கேற்ற கல்வி என பலவற்றையும் கருத்தில் கொண்டு பிள்ளை வளர்ப்பு அமைந்திருக்க வேண்டும்.

**கருத்து 5. பிள்ளைகளின் கடமை**

- பெற்றுச் சீராட்டி பாராட்டி வளர்த்து இந்த உலகில் வாழத் தயார்ப்படுத்தும் தாய் / பெற்றோர்களுக்கு பிள்ளைகளின் கடமை :
- கல்வியில் சிறந்து விளங்கி நற்பெயர் வாங்கிக் கொடுத்தல்
- எந்த இழிவான செயல்களும் செய்யாமல் இருந்து நல்ல பெயர் வாங்கிக் கொடுத்தல்
- வயதில் முதிர்ந்தவர்களாகிவிட்ட பெற்றோர் / தாய் பாதுகாத்தல், பணிவிடைகள் செய்தல்.
- இறுதி காலத்தில் உடன் வைத்து அன்பாகப் பாதுகாத்தல்

**முடிவுரை :**

- பெற்றோர்கள் / தாய் கண்ணால் காணுகின்ற தெய்வங்கள்.
- அவர்கள் செய்த தியாகங்களை எண்ணி மனம் நோகாமல் நடந்து கொள்ள வேண்டும்.
- பெற்றோர் / தாயின் அருள் இருந்தால் வாழ்க்கையில் நல்வினை எல்லாம் பெற முடியும்.

**இளைஞர்களின் சீர்கேட்டிற்குத் தமிழ்த் திரைப்படங்களே காரணம் (வாதித்து எழுதுக)**

**தலைப்பைச் சார்ந்து எழுதுதல்**

**முன்னுரை** :

- இளைஞர்கள் நாட்டின் தூண்கள். இன்றைய இளைஞர்களின் செழுமை நாளைய நாட்டின் வளமைக்கு அடித்தளமாகும்.
- இன்றைய நவீன யுகத்தில் இளைஞர்கள் தங்கள் நற்பண்புகளைத் தக்க வைத்து சிறந்த மனிதனாக வாழ பல சவால்களைத் எதிர்நோக்குகின்றனர்.
- இந்த நவீன வாழ்க்கையில் இளைஞர்கள் நல்லொழுக்கம் கெடுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.
- அதில் தமிழ்ப்திரைப்படங்களின் தாக்கமும் ஒரு காரணம் என்று என்பதை உண்மையே. இளைஞர்களில் நல்லொழுக்கச் சீர்கேட்டிற்கு தமிழ்த் திரைப்படங்களே முக்கிய காரணமாக விளங்குகின்றது. **(நிலைப்பாடு)**

**கருத்து 1 : சண்டைக் காட்சிகள் இளைஞர்கள் மனத்தில் வன்முறையை விதைக்கின்றன.**

- இன்றைய இளைஞர்கள் அதிகம் எதிர்ப்புணர்வும் வன்முறையையும் கொண்டவர்களாக இருக்கின்றனர்.
- இதனால் எதற்கெடுத்தாலும் சண்டை மற்றும் வன்முறையைச் சிக்கல் தீர்க்கும் கருவியாகப் பயன்படுத்துகின்றனர்.
- சான்று : (ஏதாவது திரைப்படக் காட்சியை எடுத்துக் காட்டி விளக்க வேண்டும்)

(வலியுறுத்தல்) இதுபோன்ற சண்டை காட்சிகளே காரணமே தவிர கூட்டுச் சேர்ந்து நல்வினை செய்யும் நண்பர்களால் அல்ல. ஆகவே இளைஞர்களின் நல்லொழுக்கச் சீர்கேட்டிற்குத் தமிழ்த் திரைப்படங்களே முதன்மைக் காரணம்.

**கருத்து 2 : இளவயது காதல் காட்சிகள்:**

- இன்றைய தமிழ்ப் திரைப்படங்களில் காதல் காட்சிகள் இல்லாத திரைப்படங்களே இல்லை எனலாம். ஒரு கோடுரமான சண்டை காட்சியிலும் காதலைத் திணித்து இளைஞர்களின் மனத்தைச் சிதறடித்து விடுகிறார்கள்.
- அதைப் பார்க்கும் இளைஞர்கள் இளவயதிலேயே மனக் குழப்பம் ஏற்பட்டு காதல் எனும் மன மயக்கத்தில் விழுகிறார்கள். கல்வி, ஒழுக்கம் , உறவு இதெல்லாம் சீர்குலைகிறது.
- சான்று : (ஏதாவது திரைப்படக் காட்சியை எடுத்துக் காட்டி விளக்க வேண்டும்)

(வலியுறுத்தல்) இதுபோன்ற இளவயது காதல் காட்சிகளே காரணமே தவிர பெற்றோர்களால் ஒரு போதும் இளைஞர்கள் கெடுவதில்லை.

**கருத்து 3 : ஒழுக்கச் சீர்கேடு காட்சிகள் (மது, புகைப்பிடித்தல், போதைப் பொருள் பயன்பாடு)**

- மது உடல் நலத்திற்கு கேடு, புகைப் பிடித்தல் புற்றுநோயை உண்டாக்கும் என்று திரைப்படத்தில் பொதுநல அறிவிப்பைப் போட்டுவிட்டு
- திரைப்படம் முழுக்க அதன் பயன்பாட்டையே வலியுறுத்தும் படங்கள்தான் அதிகம்.
- அவ்வாறான காட்சிகளைக் காணும் இளைஞர்கள் மிக எளிதாக கவரப்பட்டுப் அப்பழக்கத்திற்கு ஆளாகுகின்றார்கள்.
- உடல் நலமும் மன நலமும் பாதிக்கப்பட்டும் சீரழிகின்றனர்.
- சான்று : (ஏதாவது திரைப்படக் காட்சியை எடுத்துக் காட்டி விளக்க வேண்டும்)

(வலியுறுத்தல்) இதுபோன்ற ஒழுக்கச் சீர்கேடு காட்சிகளே காரணமே தவிர பொது அறிவு வளர்க்கும் சமூக ஊடங்களால் ஒரு போதும் இளைஞர்கள் கெடுவதில்லை.

**கருத்து 4 : குற்றச் செயல் அடங்கிய காட்சிகள் .**

- நவீன அறிவியல் உத்திகளைப் பயன்படுத்தி எடுக்கப்படும் திரைப்படங்கள் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.
- தகவல் யுக அறிவைப் பயன்படுத்தி திருடுவது எப்படி?, தடயமே இல்லாமல் கொலை செய்வது எப்படி?
- இதுபோன்ற காட்சிகளைக் காணும் இளைஞர்கள் அதையே பின்பற்றி செயல்பட முனைகின்றனர்.
- அதனால் குற்றச் செயல்கள் அதிகரிக்கிறது. இளைஞர்களின் எதிர்காலம் பாதிக்கப்படுகிறது,
- சான்று : (ஏதாவது திரைப்படக் காட்சியை எடுத்துக் காட்டி விளக்க வேண்டும்)
(வலியுறுத்தல்) இதுபோன்ற குற்றச் செயல் காட்சிகளே காரணமே தவிர மேனாட்டு மோகத்தால் ஒரு போதும் இளைஞர்கள் கெடுவதில்லை.

**கருத்து 5 : இளைஞர்களின் கல்வி வீழ்ச்சி அடைகிறது.**

- திரைப்படம் பார்ப்பதையே பொழுது போக்காக எடுத்துக் கொள்கிறார்கள்.
- தங்களுக்குப் பிடித்த நடிகர்களின் படங்கள் பார்ப்பதிலேயே அதிக நேரத்தைச் செலவழிக்கின்றனர்.
- வீட்டுப் பாடம் செய்வதில்லை, வகுப்பில் திரைப்படம் பற்றி அரட்டை அடித்தல்,
- இதனால் கல்வி கேள்விகளில் அக்கறை இன்மை ஏற்படுகிறது.
- தேர்வில் தோல்வி அடைந்து – எதிர்காலம் பாழாகிறது.

**முடிவு : நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்த வேண்டும்**

தமிழ்த்திரைப்படங்களே இளைஞர்களின் நல்லொழுக்கச் சீர்கேட்டிற்கு வழிவகுக்கின்றன. ஆகவே இளைஞர்கள் திரைப்பட மோகத்தைக் குறைத்துக் கொண்டு பயனுள்ள வழிகளில் நேரத்தைச் செலவிடவேண்டும்.

**இளைஞர்களின் சீர்கேட்டிற்குத் தமிழ்த் திரைப்படங்களே காரணம் (வாதித்து எழுதுக)**

**தலைப்பைச் எதிர்த்து எழுதுதல்**

**முன்னுரை** :

- இளைஞர்கள் நாட்டின் தூண்கள். இன்றைய இளைஞர்களின் செழுமை நாளைய நாட்டின் வளமைக்கு அடித்தளமாகும்.
- இன்றைய நவீன யுகத்தில் இளைஞர்கள் தங்கள் நற்பண்புகளைத் தக்க வைத்து சிறந்த மனிதனாக வாழ பல சவால்களைத் எதிர்நோக்குகின்றனர்.
- இந்த நவீன வாழ்க்கையில் இளைஞர்கள் நல்லொழுக்கம் கெடுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.
- அதில் தமிழ்ப் திரைப்படங்கள் காரணமாகக் காட்டப்படுகின்றன. அது ஏற்க முடியாத கூற்றாகும். பொழுது போக்குத் தன்மை கொண்ட திரைப்படங்கம் ஒருபோதும் இளைஞர்களின் நல்லொழுக்கச் சீர்கேட்டிற்குக் காரணமாகாது. மாறாக பிற காரணங்களே இளைஞர்களின் சீர்கேட்டிற்கு வழிவகுக்கிறது. **(நிலைப்பாடு)**

**கருத்து 1 : கூடா நட்பு**

- இளைஞர்கள் வாழ்க்கையில் நண்பர்கள் மிக முக்கியமானவர்கள்.
- பெற்றோர்களிடம் பகிரத் தயக்கம் காட்டும் விடயங்களை நண்பர்களிடமே பகிர்கின்றனர்.
- சுவாமி விவேகானந்தர் ' உன் நண்பர் யார் என்று சொல் நீ யார் என்பதை நான் கூறுகிறேன்' என்கிறார். வாழ்க்கையில் நண்பனின் தாக்கம் அதிகமாக உள்ளது
- கூடா நட்போடு சேர்க்கை ஏற்படும்போது தீயச் செயல்களைக் கற்றுக் கொள்கிறார்கள்.
- மது, புகைப்பிடித்தல், சுற்றித்திரிதல், குண்டர் கும்பல் போன்ற நடவடிக்கைளில் ஈடுபட நண்பர்களின் நட்பே காரணமாகிறது.

(**வாதம்** : இவ்வாறு கூடா நட்பு இளைஞர்கள் சீர்கெட முதன்மை காரணியாக இருக்கும்போது, பொழுது போக்கு நோக்கம் கொண்ட திறைப்படங்களைச் சாடுவதில் எந்த அடிப்படையும் இல்லை.

**கருத்து 2 : பெற்றோர்களின் அலட்சியப் போக்கு**

- பரபரப்பான வாழ்க்கையில் பணத் தேவை அதிகம். அதைத் தேடி ஓடும் பெற்றோர்கள்
- அதனால் பிள்ளைகளைக் கவனிக்க இயலவில்லை.
- பணத்தை மட்டும் கொடுத்தால் எல்லாம் நிறைவாகப் பெற்று விடுவார்கள் என்ற எண்ணத்தில் அலட்சியமாக இருப்பதால் பிள்ளைகளின் செயல்களைக் கவனிப்பதில்லை.
- பிள்ளைகள் பெற்றோர்களிடம் கிடைக்க வேண்டிய அன்பை வெளியில் தேட ஆரம்பித்து சீர்கேடுகளில் மாட்டிக் கொள்கின்றனர்.

(வாதம் : இவ்வாறு பெற்றோர்களின் அலட்சிய போக்கு இளைஞர்கள் சீர்கெட முதன்மை காரணியாக இருக்கும்போது, மனமகிழ்ச்சிகாகப் பார்க்கப்படும் திரைப்படங்களைச் சாடுவதில் எந்த அடிப்படையும் இல்லை.

**கருத்து 3 : சமூக ஊடகங்கள்**

- இன்றைய வாழ்க்கையை ஆக்கிரமித்து நம்மை அடிமையாக்கி வைத்திருக்கும் அறிவியல் கண்டுபிடிப்பு இந்தச் சமூக ஊடகங்கள்.

- இன்றைய இளைஞர்களின் வாழ்க்கையில் அதிக தாக்கத்தைக் கொடுப்பதாக இவை இருக்கின்றன.
- காலை எழுந்தது முதல் இரவில் உறங்கும் வரை ஒரு இளைஞனின் வாழ்க்கை முற்றிலும் சூரையாடிய சமூக ஊடகங்கள் எதிர்மறை விளைவுகளையும் ஏற்படுத்துகின்றன.
- முகம் தெரியா நட்பு, கள்ள உறவு, வரையறையற்ற அரட்டை, ஆபாச டிக் டோக் காணொலிகள் போன்ற வரம்பற்ற இளைஞர்களின் செயல்பாடுகளுக்குச் சமூக ஊடகம் மிக முக்கியக் காரணமாக இருக்கிறது.

(வாதம் : இவ்வாறு சமூக ஊடகங்கள் இளைஞர்கள் சீர்கெட முதன்மை காரணியாக இருக்கும்போது, யதார்த்த வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டி நம் வாழ்க்கையைச் சீர்செய்யும் திரைப்படங்களைச் சாடுவதில் எந்த அடிப்படையும் இல்லை.

**கருத்து 4 : கல்வியில் எழும் மன அழுத்தம்**

இன்றைய கல்விமுறை இயந்திரத்தனமானது. அடுக்கடுக்கான பாடங்கள், அதிக தேர்வுகள், அளவில்லா மதிப்பெண்கள் போன்ற நெருக்கடியான கல்விமுறை செயல்பாடுகள் ஒரு இளைஞனைச் சோர்வுக்குள்ளாக்குகிறது.

- அதுவே மன அழுத்தமாக மாறி மாணவர்களுக்குச் சிக்கலை ஏற்படுத்துகிறது.
- இத்தோடு சேர்த்துக் கல்வியில் சிறக்க வேண்டும் என்ற சிந்தனையில் ஆசிரியர்களும் பெற்றோர்களும் கொடுக்கும் அழுத்தம் மாணவர்களின் சீர்கேட்டிற்கு வழிவகுக்கிறது.
- கல்வி கசந்து விட்ட நிலையில் ஒரு மாணவர் வகுப்புக்கு மட்டம் போடுதல், பாடத்தில் அக்கறை இன்மை போன்ற சிக்கல்களில் மாட்டிக் கொள்கின்றனர்.

வாதம் : இவ்வாறு கல்வியில் எழும் மன அழுத்தம் இளைஞர்கள் சீர்கெட முதன்மை காரணியாக இருக்கும்போது, சேர்கின்ற மன அழுத்தத்தை எல்லாம் சில கணம் மறந்து சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் திரைப்படங்களைச் சாடுவதில் எந்த அடிப்படையும் இல்லை.

**கருத்து 5 : வறுமை / பண நெருக்கடி**

- பணம் என்றால் பிணமும் வாயை பிளக்கும்.
- பண வீக்கம், வேலை இல்லாத் திண்டாட்டம், பொருளாதார மந்த நிலை போன்ற காரணங்களால் பணப் பற்றாக்குறை ஏற்படுகிறது
- பணம் பற்றாக்குறையில் வளரும் இளைஞர்களின் வாழ்க்கை இருதலைக் கொள்ளி எறுப்பு போலத்தான்.
- பண பற்றாக்குறையைப் போக்குவதற்காகக் குறுக்கு வழிகளைப் பின்பற்ற தொடங்குகின்றனர்.
- பணத் தேவைக்காக போதை பொருள் விநியோகம், சட்ட விரோத சூதாட்டம், திருட்டு, கொலை, கொள்ளை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

**முடிவு : நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்த வேண்டும்**

தமிழ்த்திரைப்படங்கள் ஒருபோதும் இளைஞர்களின் நல்லொழுக்கச் சீர்கேட்டிற்குக் காரணமாகுவதில்லை. மாறாக பிற காரணங்களே இளைஞர்கள் சீர்கெட காரணமாக இருக்கின்றன. ஆகவே இளைஞர்கள் நல்லது கெட்டதைச் சீர்தூக்கிப் பார்த்து வாழ்க்கையை பயனுள்ள வழிகளில் வாழக் கற்றுக் கொள்ளவேண்டும்.

**வருணனை**

1. காட்சி அல்லது நிகழ்ச்சியை நேரில் பார்த்தவாறும் உணர்ந்தவாறும் அழகிய மொழிநடையில் விவரிப்பது.

வருணனை : 2 வகையாக அமையலாம்

- இயற்கை காட்சி (சுற்றுலாத் தளங்கள்)
- நிகழ்ச்சி (சுதந்திர தினம், ஆசிரியர் தினம், மேலும் பல)

**2.** வருணனையில் இடம்பெற வேண்டிய கூறுகள் :

**அ) தொடக்கம் :**

(பொதுவான விவரிப்பு + குறிப்பிட்ட நிகழ்ச்சி / இடம் / காட்சி விவரிப்பு)

**ஆ) கருத்துப் பகுதி :**

தொடர்ந்து நடைபெறும் நிகழ்ச்சி குறித்த வருணனை.

**இ) முடிவு :**

நிகழ்ச்சியின் முடிவு / பயணத்தின் முடிவு

**சட்டகம் : (நிகழ்ச்சி வருணனை)**

**1. தொடக்கம் :**

**நிகழ்ச்சி / இடம் பற்றிய பொதுச் செய்தி**

ஒவ்வொரு ஆண்டும் மலரும் மே திங்கள் பதினாறாம் நாள் ஆசிரியர் தினமாகக் கொண்டாடுகிறது. **ஆல மரமாய் நின்று கல்வி எனும் நிழல் தரும்** ஆசிரியரின் அளப்பரிய பணியையும் அர்ப்பணிப்பையும் நினைவுகூரும் வகையில் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

**+**

**குறிப்பிட்ட இடம் / நிகழ்ச்சி குறித்த தொடக்க விவரிப்பு**

அதிகாலை **போர்த்திய பணித்திரையை விளக்கி** என் பள்ளியின் ஆசிரியர் தினக் கொண்டாட்டத்தை **வரவேற்றுக் கொண்டிருந்தான் காலை கதிரவன்**. பள்ளி வாயிலில் கட்டப்பட்ட சிறப்புப் பதாகைகள் **காற்றிலாடிக் கையசைத்து ஆசிரியர்களை வரவேற்றுக் கொண்டிருந்தன**. பள்ளியின் முதன்மை அரங்கு ஆசியர்களை வரவேற்க விழாக் கோலம் பூண்டிருந்தது. **வண்ண விளக்குகள் கண்சிமிட்டிக் கொண்டிருக்க**, விழா மேடை அழகிய **பூந்தோட்டமாய் காட்சி** அளித்துக் கொண்டிருந்தது.

**2. கருத்துப் பகுதி :**

தொடர்ந்து நடைபெறும் நிகழ்ச்சி குறித்த வருணனை. எவற்றை வருணிக்கப் போகிறோம் என்பதைத் திட்டமிட்டுக் கொள்ளவும்.

கூடியிருக்கும் மக்கள் இயல்பு,

சிறப்பு நிகழ்ச்சிகள்,

குறிப்பிட்ட சில இடங்கள்

**கூடியிருக்கும் மாணவர் இயல்பு பற்றிய வருணனை**

பள்ளியின் முதன்மை அரங்கில் **கடல் அலையென** மாணவர்கள் கூடியிருந்தனர். நிகழ்ச்சி இன்னும் தொடங்காத நிலையில் மாணவர்கள் பேசிக் கொண்டிருந்தது **ஆழிப் பேரலையின் பேரிரைச்சலையும் மிஞ்சி இருந்தது**. அன்றைய நாள் விழா நாயகர்களான ஆசிரியர்கள் அரியணை ஏறப்போகும் காட்சியைக் காண்பதற்காக மாணவர்களின் **விழிகள் மலர்ந்த தாமரை மலர்கள்போல் காத்துக் கொண்டிருந்தன**.

**சிறப்பு நிகழ்ச்சிகள் பற்றிய வருணனை**

அந்த மண்டபத்தில் நிலவிய மாணவர் கூட்டத்தின் பேரிரைச்சலையும் மிஞ்சிக் கொண்டு **போர்க்களத்தின் எக்காள முழக்கமென** ஆசிரியர் தின வாழ்த்துப் பாடலின் தொடக்க ஒலி முழங்கியது. அடுத்த கணம் மாணவர்களின் பேரிரைச்சல் பேரமைதியானது. வாழ்த்துப் பாடலிசை விழா மண்டம் முழுமையும் ஆட்கொண்டது. **தேரில் வரிசையாகக் கட்டப்பட்ட மணிகள்போல** ஆசிரியர்கள் வரிசையாக கொண்டாட்ட அரங்கிற்குள் நுழைந்தனர். ஆசிரியர்களின் வருகையைக் கண்ட மாணவர்களின் ஆராவாரக் கூச்சல் **இமயத்தையும் மிஞ்சியிருந்தது**. ஆசிரியர்களின் அணிவகுப்பைப் தலையேற்றுப் பள்ளியின் முதல்வர் **அரிமாவென பீடு நடைபோட்டு** வர அவர்களைப் பின் தொடர்ந்து பிற ஆசிரியர்களும் வந்து விழா மேடையில் அமர்ந்தனர்.

ஆசிரியர் தின கொண்டாட்டத்தின் முதல் அங்கமாக தேசிய பண் ஒலிக்கப்பட்டது. **கடல் பேரலையென** ஆர்பரித்த மாணவர்களின் களிப்பு சட்டென அமைதி நிலைக்குந்த் திரும்பியது. மாணவர்கள் அனைவரும் தேசியப் பண் மற்றும் மாநிலப் பண் ஆகியவற்றை மிக உற்சாகதோடு பாடினர். பின்பு கடவுள் வாழ்த்துப் பாடப்பட்டது. பள்ளி மாணவர் தலைவரின் வாழ்த்துரையைத் தொடர்ந்து சிறப்பு நடனமும் நடைப்பெற்றது. ஆசிரியர்களின் அளப்பரிய பணியை நினைவுக் கூரும் வகையில் காட்சியும் கானமுமாக சிறப்பு நடனம் அமைந்திருந்தது. **வானவில்லின் வண்ணமாக** மாணவர்கள் உடையணிந்து அச்சிறப்பு நடனத்தை வழங்கினார்கள். **பூஞ்சோலையில் ஆடிக் களிக்கும் பட்டாம் பூச்சிகளாலவும் துள்ளிக் குதித்தோடும் மான் குட்டிகள்** போலவும் மாணவர்கள் மிக உற்சாகத்தோடு நடனத்தைப் படைந்தனர்.

இவ்விழாவில் மேலும் ஒரு சிறப்பு அங்கம், ஆசிரியர் மாணவர்களுக்கிடையான தொடர் விளையாட்டுப் போட்டி. **துடிப்புடன் இயங்கும் இளஞ் சிங்கமென** மாணவர்கள் சிவப்பு நிற சீருடையுடன் தயாராக நின்றனர். **அறிவாலும் ஆற்றலாலும் அசையாத யானையென** எதிரணியின் ஆசிரியர்கள். இரு அணிகளுக்கிடையேயும் போட்டி ஆரம்பமானது. இளமை துடிப்புக்கு ஈடுகொடுத்து முதிர்ச்சி அனுபவம் விளையாடியது. ஒட்டுமொத்த பள்ளியின் கவனமும் இந்த நிகழ்ச்சியின்பால் முழுமையாகத் திரும்பியது. ஆசிரியர் தினமாதலால் மாணவர் அணி ஆசிரியர்களுக்கு விட்டுக் கொடுத்து விளையாடியது. அனைத்து தொடர் விளையாட்டுகளிலும் ஆசிரியர் அணியே வெற்றி பெற்றது.

இந்த நிகழ்ச்சியின் முத்தாய்ப்பு அங்கமாக அமைந்தது பரிசளிப்பு அங்கம். இப்பரிசளிப்பு நிகழ்ச்சியின் தொடக்கமாக ஆசிரியர் தின கவிதை ஒப்பிவித்தல் அமைந்தது. ஆசிரியரின் அர்ப்பணிப்புகளையும் அயராத உழைப்பையும் போற்றும் வண்ணம் இக்கவிதைகள் அமைந்திருந்தன. மாணவர்களின் உருக்கமான படைப்பு ஆசிரியர்களின் **இரும்பு இதயங்களை இலகுவாக்கியிருந்தது**. **தேனுண்ட வண்டென** ஆசிரியர்கள் மாணவர்களின் கவிதைகளில் மெய் மறந்து போயிருந்தனர். ஆசிரியர்களின் இயல்புகளை விடுகதையாகச் சொல்லி ஆசிரியர்கள் மேடைக்கு அழைக்கப்பட்டனர். அவர்களுக்குத் தேர்தெடுக்கப்பட்ட மாணவர்கள் பரிசுகளை வழங்கினர்.

**3. முடிவு : நிகழ்ச்சியின் நிறைவு / முடிவு பற்றி எழுதவேண்டும்**

இன்னும் சில இனிய நிகழ்ச்சிகள் இவ்வாண்டு ஆசிரியர் தினக் கொண்டாட்டத்தை அலங்கரித்திருந்தன. ஆசிரியர்களின் பணியை மாணவர்கள் போற்றுவதற்குக் களம் அமைத்துக் கொடுத்தது இந்த நிகழ்ச்சி. **வாழ்க்கை எனும் பெருங்கடலைக் கடப்பதற்குக் கல்வி எனும் கப்பலில் பயணிகளான மாணவர்களை ஏற்றிச் சென்று கறை சேர்க்கும் கப்பலோட்டிதான்** ஆசிரியன். இந்நன்னாளில் ஆசிரியர்களை மகிழ்விப்போம்; மனம் திறந்து போற்றுவோம்.

**கருத்து விளக்கக் கட்டுரை**

**சேமிப்பு**

**முன்னுரை :**

- நாடு / சமூகம் / தனி மனிதன் வளர்ச்சிக்கு அடிப்படையாக பல காரணங்கள் துணை புரிகின்றன.
- கல்வி, பண்பாடு, ஒழுக்கம், ஒற்றுமை, மொழி, தொழிநுட்பம், விடாமுயற்சி போன்ற பல கூறுகள் பங்காற்றுகின்றன.
- இந்த நவீன காலத்தில் இவையெல்லாம் இயங்குவதற்கு அடிப்படையாக் இருப்பது பணம்.
- பணம் இல்லாதவன் பிணத்திற்குச் சமம்.
- ஒரு துறையில் இப்படிப்பட்ட பண நிர்வாகம் முறையாக அமைந்தால் மட்டுமே முன்னேற்றத்தைக் காண முடியும்.
- பண நிர்வாகத்தின் அடிப்படை சேமிப்பு.

**கருத்து 1 : சேமிப்பின் அவசியம்**

**அவசர மருத்துவ செலவுகளுக்குத் பயன்படும்.**

- சுவர் இல்லாமல் சித்திரம் வரைய முடியாது. உடல் நலமாக இருந்தால்தான் வாழ்க்கை சிறக்கும்.
- இன்றைய சவால் மிக்க உலகத்தில் உடல் நலத்தோடு வாழ்வது என்பதும் மிகப் பெரிய சவால்தான். எந்த நேரத்தில் என்ன உடல் நலக் கோளாறு ஏற்படும் என்பதைக் கணிக்க இயலாது.
- தீடிரென விபத்து காரணமாவோ, ஒழுக்கமின்மை காரணமாகவே, தவறான உணவு பழக்கத்தினாலோ உடல் நலம் சரியில்லாமல் போகும்போது மருத்துவ சிகிச்சைக்குப் பயன்படுத்தலாம்.

**பொது முடக்க கால தேவைக்குப் பயன்படும்**

- போர், பெருந்தொற்று, இயற்கை பேரிடர் போன்ற காரணிகளால் பொது முடக்கம் ஏற்படும்போது நாம் பல சிக்கல்களுக்கு உள்ளாகுகிறோம்.
- பொது முடக்கத்தால் வேலை செய்யும் அலுவலகம், தொழிற்சாலைகள் போன்றவை தற்காலிகமாகவோ நிரந்தமாகவோ மூடப்படும்.
- அவ்வேளையில் வேலை இழப்பு ஏற்பட்டு வருமானத்தை இழக்க நேரிடும்.
- சேமிப்பு இருந்தால் குடும்பத்தின் அன்றாட செலவுகளை ஈடுகட்டலாம்.
- கடன்பட தேவையில்லை.

**உயர்கல்வி பெற உதவும்**

- தனியார் / அரசாங்க உயர்கல்விக் கூடங்களில் பயில பணம் அவசியம்.
- நல்ல தரமான, கால தேவைக்கு ஏற்ற உயர்கல்வி பெற சேமிப்பு அவசியம்.
- கல்விக்கான துணைக் கருவிகள் (மடிக்கணிணி, அச்சு இயந்திரம், இணைய வசதி, பாடநூல்கள் போன்றவை) வாங்க சேமிப்பைப் பயன்படுத்தலாம்.

- பெற்றோர்களுக்கும் குடும்ப உறவுகளுக்கு கூடுதல் சுமை கொடுக்காமல் சேமித்த பணத்திலிருந்து உயர்கல்வி மேற்கொள்ளலாம்.
- வெளியில் கடன் வாங்காமல் சேமிப்பைப் பயன்படுத்தி கல்வி பெறலாம்.

**அறச் செயல்கள் செய்யலாம்**

- உலகில் அனைத்து மக்களும் மகிழ்ச்சியாக வாழ்ந்திடுவதில்லை. பல காரணங்கள் பல இடங்களில் பலர் துன்பப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள்.
- அத்தகையோரின் துயர்களைப் போக்குவதற்குச் சேமிப்பு அவசியம்.
- ஆடம்பர செலவு செய்யாமல் தேவைக்கு மிகுதியானவற்றைச் சேமித்து வைத்தால் துன்பப்படுபவர்களுக்கு பணமாகவோ அல்லது பொருள் கொடுத்தோ உதவலாம்.
- அவர்களின் துன்பத்தைச் சிறிய அளவாவது நம்மால் போக்கிவிட முடியும்.

**கருத்து 2 : சேமிப்பின் வகைகள் (எப்படி சேமிப்பது ?)**

- தேவையானவற்றிற்குச் சிக்கனமாக செலவு செய்துவிட்டு மீதப்படுகின்ற பணத்தை பல வகையில் சேமிக்கலாம்
- வங்கியில் சேமிக்கலாம்
- காப்புறுதி வாங்கிச் சேமிக்கலாம். (உயிர் பாதுகாப்போடு எதிர்கால சேமிப்பும் பெருகும்)
- அரசாங்க பங்கு பத்திரங்கள் வாங்கி அதன்வழி சேமிக்கலாம்.
- சிறுவர்களுக்குச் சிறு வயது முதலே உண்டியில் பணத்தைச் சேமிக்கக் கற்றுக் கொடுக்கலாம்.

**கருத்து 3 : சேமிக்கவில்லை என்றால் என்ன பாதிப்பு?**

- ஆபத்து அவரசர தேவைகள் ஏற்படும்போது கடன் வாங்க வேண்டிய சூழல் ஏற்படும்
- அதிக வட்டிக்குக் கடன் வாங்கித் திரும்ப செலுத்தவில்லை என்றால் திவாலாகும் நிலை ஏற்படும் / வாகனம், வீடு போன்ற சொத்துகள் பறிமுதல் செய்யப்படும்.
- வட்டி முதலைகளின் அச்சுறுத்தலுக்கு ஆளாக நேரிடும்.
- வாழ்க்கையிலும் குடும்பத்திலும் அமைதி/ மகிழ்ச்சி இழந்து துன்பட நேரிடும்
- தற்கொலைக்கும் வலிவகுக்கும் / கொலை, கொள்ளை போன்ற தீயச் செயல்களில் ஈடுபடவும் தூண்டும்.

**கருத்து 4 : சேமிப்புப் பழக்கத்தை வளர்ப்பது எப்படி?**

- சிறுவயது முதற்கொண்டு பெற்றோர்கள் பிள்ளைகளுக்குப் சேமிப்பின் அவசியத்தை விளக்க வேண்டும்.
- சேமிக்கும் வழிமுறைகளைக் கற்றுக் கொடுக்க வேண்டும்.
- பிள்ளைகளின் செலவு செய்யும் போக்கினைக் கண்காணிக்க வேண்டும்.
- அவர்களுக்கென வங்கிக் கணக்கு ஏற்படுத்தி சேமிப்பைத் தொடங்க வேண்டும்.
- அதிகமாகச் செலவு செய்யும் பிள்ளைகளைக் கண்டிக்க வேண்டும்.
- பெற்றோர்கள் ஆடம்பரச் செலவு செய்வதைத் தவிர்க்க வேண்டும்.